# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. Crl.Mp.174/2026**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பாக்கியராஜ் | Prosecution | PW-2 Chief |
| Father Name | சந்திரகாசன் | Court | JM, Court, Sirkali. |
| Village | மாணிக்கவாசல் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 43/2026 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha Grade-3 Bench Clerk, டf this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 02.04.2026**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சீர்காழி யில் உள்ள VNP காம்லக்ஸில் தட்டச்சு பணி செய்யும் கடை நடத்திவருகிறேன். இந்த வழக்கின் விபரம் எனக்கு நன்கு தெரியும். மேற்படி வழக்கின் புகார்தாரர் செல்வராஜ் எனது பெரியப்பா ஆவார். இந்த வழக்கில் குறிப்பிடப்படுபவர் ஆரப்பள்ளம் கிராமம் புல எண்.413/17 (பழைய புல எண்.140) நிலம் தொடர்பான அனைத்து விபரங்களும் எனக்கு நன்றாக தெரியும். மேற்கண்ட நிலத்தின் உரிமையாளர் காலம்சென்ற பொன்னுசாமி மகன் நடேசன் ஆவார். அவருடைய மனைவி பெயர் அண்ணபூரணி ஆவார். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு புகார் தாரர் செல்வராஜ் அவர்கள் அண்ணபூரணி அவர்களிடமிருந்து ரூ.20 ஆயிரம் ரொக்கமாக கொடுத்து வாய்மொழியாக பேசி நிலத்தை அண்ணபூரணி அவர்களிடமிருந்து அண்ணபூரணி ஒப்படைக்க அந்த நத்தம் மனையை (நிலம்) தன் வசம் பெற்றுக்கொண்டார். அந்த விபரம் எனக்கு தெரியும். இந்த விபரம் முழுவதும் அண்ணபூரணியின் அண்ணன் முனியன் மகன் ராஜேந்திரன் அவர்களுக்கும் தெரியும்.

அந்த நிலத்தை செல்வராஜ் தொடர்ந்து அனுபவித்து வருவது எனக்கு நன்றாக தெரியும். இந்த வழக்கின் எதிரி சம்பந்தம் அந்த இடம் சம்பந்தமாக தொடர்ந்து பிரச்சனை செய்து வந்த நிலையில் சீர்காழி மாவட்ட

உரிமையியல் நீதிமன்றத்தில் **O.S. No. 64/2025** என்ற சிவில் வழக்கு தொடர்ந்து நடத்தி வருகிறார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் இந்த வழக்கின் எதிரிகள் பொன்னுசாமி மகன் சம்பந்தம், பாலமுருகன் மனைவி அருணாதேவி, ஆவண எழுத்தர் சீர்காழி வழக்கறிஞர் T.இளையராஜா ஆகியோர்கள் சேர்ந்து சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற உத்தரவை போலியாக தயார் செய்து அதற்கேற்றார் போல் பொன்னுசாமி மகன் சம்பந்தம் தான் வாரிசு என்று போலியாக வாரிசு சான்றையும் தயார் செய்து **22.07.2025** அன்று கொள்ளிடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறைகேடாக ஒரு பதிவு பத்திரத்தை செய்துள்ளார்கள். அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும். மேற்படி மோசடி குறித்து **06.12.2025** அன்று காவல் அதிகாரிகளுக்கு பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியதும் எனக்கு தெரியும்.

மேலே கூறியுள்ள அனைத்து விபரங்களும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் உண்மையானவை என்று மாண்பமை நீதிமன்றத்தில் தெரிவிக்கிறேன். எனவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் போலியாக நீதிமன்ற உத்தரவு தயார் செய்து அந்த உத்தரவிற்கு ஒரு போலி வாரிசு சான்று தயார் செய்து மோசடியாக பத்திரபதிவு செய்த இந்த வழக்கின் எதிரிகள் பொன்னுசாமி மகன் சம்பந்தம், பாலமுருகன் மனைவி அருணாதேவி, ஆவண எழுத்தர் சீர்காழி வழக்கறிஞர் T.இளையராஜா ஆகியோர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுத்து நீதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.